KINGFA/SE/2025-26 **Date:** 07/02/2026

To,

**National Stock Exchange of India Limited**
Exchange Plaza, Plot No. C/1, G- Block, Bandra –Kurla Complex, Bandra (East), Mumbai 400051

**BSE Limited**
Corporate Relationship Department 1st Floor, New Trading Ring, Rotunda Building, P.J. Towers, Dalal Street, Fort, Mumbai 400001

**Symbol: KINGFA**

**Scrip Code: 524019**

**Subject: Newspaper Advertisements - Unaudited Standalone Financial Results for the quarter and nine months ended December 31, 2025.**

Dear Sir/Madam,

The Board of Directors at its meeting held on February 7, 2026 has inter alia, approved the Unaudited Standalone Financial Results of the Company for the quarter and nine months ended December 31, 2025. As per Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the said financial results were published in the following newspapers on February 8, 2026:

- The Financial Express (English); and
- Makkal Kural (Tamil).

A copy of the newspaper clippings are attached herewith. These are also being made available on the website of the Company at www.kingfaindia.com.

You are requested to take the above information on record.

Thanking You

Yours truly,

**For Kingfa Science & Technology (India) Limited**

DEEPAK VYAS
Digitally signed by DEEPAK VYAS
Date: 2026.02.09 09:56:01 +05'30'

**Deepak Vyas**
**Company Secretary & Compliance Officer**

Kingfa Science & Technology (India) Limited ★ KINGFA


**Kingfa Science & Technology (India) Limited**

**CIN:** L25209TN1983PLC010438
**Regd. Office:** Dhun Building, III Floor,
827, Anna Salai, Chennai - 600002.
**Tel:** +44 – 28521736 **Fax:** +44 – 28520420
**E-mail:** cs@kingfaindia.com
**Website:** www.kingfaindia.com

ADVANCE AGROLIFE LIMITED
(FORMERLY KNOWN AS ADVANCE AGROLIFE PRIVATE LIMITED)

## ADVANCE AGROLIFE LIMITED

CIN: L24121RJ2002PLC017467
**Registered Office:** E-39, RIICO Industrial Area, Bagru (Ext.), Jaipur (Raj)- 303007
**Corporate Office:** 301, 3rd Floor & 140-B Pandit TN Mishra Marg, Nirman Nagar, Jaipur (Raj)- 302019
Phone: 0141-4810126 • Website: www.advanceagrolife.com • Email: cs@advanceagrolife.com

### STATEMENT OF UN-AUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

In compliance with Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI Listing Regulations"), the Board of Directors of Advance Agrolife Limited ("the Company") have at its meeting held on Saturday February 07, 2026, considered and approved the Unaudited Standalone Financial Results of the Company for the quarter and nine months ended on December 31, 2025 ("Financial Results").

The said Financial Results along with Limited Review Reports are available on Stock Exchange websites at **www.bseindia.com** and **www.nseindia.com** and also on the Company's website at **https://advanceagrolife.com/web/financial_result**

**The same can be accessed by scanning the Quick Response (QR) Code from the compatible devices:**

Place : Jaipur
Date : 07 February, 2026

For and behalf of Board of Directors
**Advance Agrolife Limited**
Sd/-
OM PRAKASH CHOUDHARY
Chairman & Managing Director
DIN- 01004122



KINGFA

## KINGFA SCIENCE & TECHNOLOGY (INDIA) LIMITED

**CIN :** L25209TN1983PLC010438
**Regd. Office :** Dhun Building, III Floor, 827, Anna Salai, Chennai - 600 002.
**Website :** www.kingfaindia.com | **Email ID :** cs@kingfaindia.com | **Tel :** +44 – 28521736 | **Fax :** +44 – 28520420

### UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

The Board of Directors of the Company at its meeting held on February 07, 2026, has approved the unaudited financial results of the Company prepared in accordance with Indian Accounting Standards for the quarter and nine months ended as on December 31, 2025. The full format of the financial results are available on the websites of the Stock exchanges where shares of the Company are listed i.e., www.bseindia.com and www.nseindia.com and also on the website of the Company i.e. www.kingfaindia.com and can be accessed by scanning the below QR Code.

Scan the QR Code to view the Results on the website of the company

Place : Pune
Date : 07/02/2026

For Kingfa Science & Technology (India) Limited
Sd/-
Mr. Deepak Vyas
Company Secretary



## Kuantum Papers Ltd

### UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31ST DECEMBER, 2025

The Unaudited Standalone Financial Results of the Company for the quarter and nine months ended 31st December, 2025 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their respective meetings held on 07th February, 2026.

The full Unaudited Financial Results alongwith the Auditors' Limited Review Report are available on the websites of the Stock Exchanges at www.bseindia.com and www.nseindia.com. The Results have been posted at the website of the Company at https://www.kuantumpapers.com/financial-information/ and can be accessed by scanning given QR code.

The above information is in accordance with Regulation 33 read with Regulation 47(1) of amended SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.

Place : Chandigarh
Date : 07th February 2026

For *Kuantum Papers Limited*
**JAGESH K KHAITAN** *Chairman*
**PAVAN KHAITAN** *Vice Chairman & MD*

KOSHEEN KRESTO (MAPLITHO) KONE KONQUER KOPIO (COPIER) KALEELA (COLOR COPIER) KUANTUM GOLD KAPPA PREMIUM KUANTUM KORRA (CREAMWOVE)
KOSMO THE EXTENSIVE RANGE OF SPECIALTY PAPER
CARTRIDGE PARCHMENT STIFFNER ENFOLD PREMIUM LITHO KODEXA KARD THERMIC KUPSTOCK SIPPS
KRAYO KRAYO BOARD (COLOR SPECIALTY) KREDA (SPECIALTY) KUANTUM BOND (EXECUTIVE STATIONERY)

Regd Office: Paper Mill, Saila Khurd 144 529, Distt. Hoshiarpur (Punjab)
kuantumcorp@kuantumpapers.com www.kuantumpapers.com 01884-502737 **CIN:** L21012PB1997PLC035243



## TARSONS PRODUCTS LIMITED

**CIN : L51109WB1983PLC036510**
**Registered office :** Martin Burn Business Park, Room No. 902, BP - 3, Salt Lake, Sector - V, Kolkata - 700091
**Website :** www.tarsons.com, **Email :** info@tarsons.com, **Telephone No.:** +91 33 3522 0300

### EXTRACT OF THE STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

(Amount in ₹ Million, unless otherwise stated)

| Sl No. | Particulars | STANDALONE | | | | | | CONSOLIDATED | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | | Nine months ended | | Year ended | Quarter ended | | | Nine months ended | | Year ended |
| | | December 31, 2025 (Unaudited) | September 30, 2025 (Unaudited) | December 31, 2024 (Unaudited) | December 31, 2025 (Unaudited) | December 31, 2024 (Unaudited) | March 31, 2025 Audited | December 31, 2025 (Unaudited) | September 30, 2025 (Unaudited) | December 31, 2024 (Unaudited) | December 31, 2025 (Unaudited) | December 31, 2024 (Unaudited) | March 31, 2025 Audited |
| 1 | Total Income from operations | 937.01 | 878.24 | 782.84 | 2,573.87 | 2,387.67 | 3,381.83 | 1,163.15 | 1,081.33 | 965.26 | 3,191.48 | 2,919.04 | 4,083.74 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/ or Extraordinary items) | 108.80 | 88.76 | 102.99 | 245.35 | 365.29 | 578.71 | 88.55 | 55.91 | 80.48 | 174.78 | 292.30 | 448.01 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary items) | 95.32 | 88.76 | 102.99 | 231.87 | 365.29 | 578.71 | 75.07 | 55.91 | 80.48 | 161.30 | 292.30 | 448.01 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 70.94 | 65.27 | 76.13 | 171.94 | 270.02 | 427.31 | 50.36 | 33.22 | 52.59 | 101.41 | 195.67 | 297.70 |
| 5 | Total comprehensive income for the period/year (comprising profit/(loss) for the period (after tax) and other comprehensive income (after tax) | 69.54 | 64.57 | 75.94 | 169.84 | 269.45 | 426.13 | 45.69 | 4.98 | 87.77 | 9.93 | 204.61 | 279.90 |
| 6 | Equity share capital | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 | 106.41 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year. | - | - | - | - | - | 6,417.48 | - | - | - | - | - | 6,195.70 |
| 8 | Earnings Per Share (of Rs. 2/- each) (for continuing and discontinued operations) - | | | | | | | | | | | | |
| | Basic | 1.33 | 1.23 | 1.43 | 3.23 | 5.07 | 8.03 | 0.95 | 0.62 | 0.99 | 1.91 | 3.68 | 5.60 |
| | Diluted | 1.33 | 1.23 | 1.43 | 3.23 | 5.07 | 8.03 | 0.95 | 0.62 | 0.99 | 1.91 | 3.68 | 5.60 |

**Note :**
1. The above is an extract of the detailed format of Unaudited Financial Results for the quarter and nine months ended December 31, 2025 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the said Results are available on the Stock Exchange websites i.e. www.bseindia.com and www.nseindia.com and on the Company's website www.tarsons.com.
2. The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on February 06, 2026.

**Place : Kolkata**
**Date: February 06, 2026**

**For and on behalf of the Board of Directors**
**Tarsons Products Limited**
**Aryan Sehgal**
**Whole Time Director**
**DIN:06963013**






SANMAR

## CHEMPLAST SANMAR LIMITED

Regd.Office: 9, Cathedral Road, Chennai - 600 086
Tel: 91 44 2812 8500
Website: www.chemplastsanmar.com E-mail id: grd@sanmargroup.com
CIN: L24230TN1985PLC011637

### Extract of consolidated and standalone unaudited financial results for the quarter and nine months ended 31st December 2025

(Rs. in Crores except for EPS data)

| Sl. No. | Particulars | Consolidated | | | | Standalone | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | Nine months ended | | Quarter ended | | Nine months ended | |
| | | 31-12-2025 | 31-12-2024 | 31-12-2025 | 31-12-2024 | 31-12-2025 | 31-12-2024 | 31-12-2025 | 31-12-2024 |
| 1 | Revenue from operations | 835.14 | 1057.55 | 2968.24 | 3195.19 | 504.34 | 585.92 | 1557.74 | 1661.99 |
| 2 | Net Profit / (Loss) for the period (before tax, exceptional and/or extraordinary items) (Refer note b below) | (162.79) | (62.97) | (311.39) | (96.18) | (76.73) | (37.39) | (160.00) | (75.53) |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after exceptional and/or extraordinary items) (Refer note b below) | (162.79) | (62.97) | (311.39) | (96.18) | (76.73) | (37.39) | (160.00) | (75.53) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after exceptional and/or extraordinary items) (Refer note b below) | (119.20) | (48.82) | (234.49) | (56.19) | (56.50) | (29.75) | (120.45) | (40.36) |
| 5 | Total comprehensive income for the period | (119.96) | (48.52) | (235.62) | (10.27) | (56.89) | (29.52) | (121.03) | 5.38 |
| 6 | Equity Share Capital | 79.06 | 79.06 | 79.06 | 79.06 | 79.06 | 79.06 | 79.06 | 79.06 |
| 7 | Earnings Per Share (of Rs. 5/- each) (Not annualised) (for continuing and discontinued operations) (Rs.) - | | | | | | | | |
| | 1. Basic: | (7.45) | (3.06) | (14.67) | (3.53) | (3.57) | (1.88) | (7.62) | (2.55) |
| | 2. Diluted: | (7.45) | (3.06) | (14.67) | (3.53) | (3.57) | (1.88) | (7.62) | (2.55) |

**Notes:**

a) The above is an extract of the detailed format of quarter and nine months ended unaudited financial results filed with stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (as amended). The full format of the quarter and nine months ended unaudited financial results are available on the Stock Exchange websites BSE: https://www.bseindia.com/xml-data/corpfiling/AttachLive/14f43aa9-7c57-47e8-a3ba-de0011e1b7ba.pdf NSE: https://nsearchives.nseindia.com/corporate/CHEMPLASTS_07022026143540_OutcomeofBMFinancials070226SD.pdf and on our website https://www.chemplastsanmar.com/downloads/investor-relations/2025-26/Q3/OutcomeofBMFinancials070226SD.pdf.

b) Exceptional and/or Extraordinary items are adjusted in the Statement of Profit and Loss in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 prescribed under Section 133 of the Companies Act, 2013.

c) Other Equity as per consolidated and standalone financials (excluding revaluation reserve) as at 31st March 2025 was Rs. 66.00 Crores and Rs. 2659.18 Crores respectively.

Scan to view full report from our website

**Place : Chennai**
**Date : 7th February 2026**

**For and on behalf of the Board**
**Chemplast Sanmar Limited**

**Ramkumar Shankar**
**Managing Director**
**DIN : 00018391**

**Vijay Sankar**
**Chairman**
**DIN : 00007875**

## நில எடுப்புக்கு உரிய நிதியை தரவில்லை

# ரெயில்வே திட்டங்களுக்கு விரைவாக நிதி வழங்குங்கள்; புதிய திட்டங்களை அனுமதியுங்கள்

## பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்

**சென்னை, பிப்.8–**

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ரெயில்வே திட்டங்களுக்கான நிதியை விரைந்து வழங்கிடவும், முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய ரெயில்வே திட்டங்களை அனுமதித்திடவும் ரெயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு கோரி, பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் இரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை முறையாக விடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் பிரதமர் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காணவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இதுதொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்திகளுக்காகவும் இக்கடிதத்தினை தான் எழுதுவதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் 931 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு ரெயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இரயில்வே துறையிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது என்றும், அது விரைவில் வழங்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### 19 ரெயில்வே திட்டங்கள்

19 முக்கிய இரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும், இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு இரயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம் – நகரி அகல இரயில் பாதை, மதுரை – தூத்துக்குடி அகல இரயில் பாதை, மணியாச்சி – நாகர்கோவில் அகல இரயில் பாதை, கன்னியாகுமரி – நாகர்கோவில் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில் – இரணியல் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல்,

தூத்துக்குடி – மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை (கட்டம்I), சின்னசேலம்கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை, மயிலாடுதுறை – திருவாரூர் அகல இரயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல இரயில் பாதை (சேலம் – கரூர் வழித்தடம் உருவாக்குதல்),

மன்னார்குடி – நீடாமங்கலம் அகல இரயில் பாதை, சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம் – திண்டுக்கல் அகல இரயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்றும், மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முதலமைச்சர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### நில எடுப்புக்கு நிதி தரவில்லை

நில எடுப்புப் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு நில உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்குவது மிக முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், துரதிர்ஷ்டவசமாக, இரயில்வே அமைச்சகத்தால் நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதங்கள், தனிப்பட்ட திட்டங்களுக்குப் பெரும்பாலும் நிதியினை முழுமையாக வழங்காமல் பிரித்து வழங்குவது என்பது, தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தினைத் தடுத்து, தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நீடித்த நிச்சயமற்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'திருவனந்தபுரம் – கன்னியாகுமரி இடையேயான அகல ரெயில் பாதை இரட்டிப்பு' திட்டத்திற்கான 16.86.51 ஹெக்டேர் நில எடுப்புப் பணி முடிக்கப்படாமல் இருப்பது இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இத்திட்டத்திற்கான நில எடுப்பிற்கு உரிய இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான 289.78 ரூபாய் கோடி நிதியினை ரெயில்வே துறை இன்னும் ஒதுக்கவில்லை என்றும்,

இது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு பெரிய திட்டம் என்றும், இது ஒன்றிய அரசின் திட்டக் கண்காணிப்புக் குழுவின் வலைதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை பகுதி, பகுதியாக வழங்குவதற்குப் பதிலாக, மொத்தமாக, சரியான நேரத்தில் ஒதுக்குவதன் மூலம், இந்த முக்கியமான திட்டங்களைத் தடையின்றி விரைவாக முடிக்க முடியும் என்று தனது கடிதத்தில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

### நிதி ஒதுக்கீடு மிகக்குறைவு

தமிழ்நாடு அரசு, ரெயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவானதொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் ரெயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருவதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தருணத்தில், சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு புதிய ரெயில்வே திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது குறித்து தாம் கவலையோடு குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர், இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், உற்பத்தி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மையமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்றும், மேம்பட்ட இரயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### தாமதமின்றி வழங்குங்கள்

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்; இரயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடி– மதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை மற்றும் திண்டிவனம் – திருவண்ணாமலை அகலப்பாதை திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்; தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய இரயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும்;

பிரதமர் தலையிட்டு, ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமரின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும் என முதலமைச்சர் தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், இதுதொடர்பாக பிரதமரிடமிருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

---

## தி.மு.க. ஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம்

# இளைஞர்களின் வாழ்க்கையை நசுக்கிவிட்டு இளைஞர் அணி மாநாடா?

## தமிழிசை சுவுந்தரராஜன் கடும் கண்டனம்

**சென்னை, பிப்.8–**

**இன்று நடைபெறவிருந்த டி.என்.பி.எஸ்.சி. 2, 2ஏ தேர்வுகளில் குளறுபடி ஏற்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.**

இது தி.மு.க. ஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம் என்று தமிழிசை சுவுந்தரராஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தெலுங்கானா ஆளுநரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான தமிழிசை சுவுந்தரராஜன் தனது எக்ஸ் தளப்பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த பதிவில், "திமுக மாடல் அரசாங்கம் முற்றிலும் நிர்வாக சீர்கேட்டினால் நிலை குலைந்து போயிருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு உதாரணம்... 9000 டிஎன்பிஎஸ்சி தேர்வர்களின் கனவு இங்கே நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது... இளைஞர்களின் வாழ்க்கை நசுக்கி விட்டு இளைஞர் அணி மாநாடு நடத்துவது தான் திமுகவின் அரசியல் நாடகம்.. பல இடங்களில் சென்டர் ஒதுக்கப்படாமல் போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் சில இடங்களில் தேர்வு எழுத ஆரம்பித்து விட்டார்கள்.. இந்த குளறுபடி இந்த ஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம்.. வாழ்க்கைப் போராட்டமாக இருக்கும் இந்த இளைஞர்கள்.. விடிவு காலம் வேண்டும் என்று கடுமையாக தயாரித்து... தேர்வுக்கு வந்தால்.. தேர்வு எழுதுவதே போராட்டமாக வெடித்திருப்பது வேதனையிலும் வேதனை உடனே இதற்கு அரசு நடவடிக்கை தேவை... ஆயிரக்கணக்கானோர் தங்கள் நேரத்தையும் பொருளையும் செலவிட்டு. ஆர்வமுடன் வந்தவர்கள் அலை கழிக்கப்பட்டிருக்கிறார்கள்... நியாயமாக சரியான திட்டமிடலுடன் தேர்வுகள் நடைபெற வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.. மறுபடியும் தேர்வு அறிவிக்கப்படும் பொழுது எந்த குளறுபடியும் இல்லாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமை...," என குறிப்பிட்டுள்ளார்.

---

# மத்திய கைலாஷ் சந்திப்பில் ரூ.61 கோடியில் "எல்" வடிவ மேம்பாலம்

## 16–ந் தேதி முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

**சென்னை, பிப்.8–**

**சென்னை மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் ரூ.61 கோடியில் கட்டப்பட்டுள்ள "எல்" வடிவ மேம்பாலத்தை முதலமைச்சர் ஸபுடாலின் வருகிற 16–ந் தேதி திறந்து வைக்க உள்ளார்.**



மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள "எல்" வடிவ இருவழிச் சாலை மேம்பாலம் கட்டுமானப் பணி நிறைவுபெற்று, முதலமைச்சரால் திறக்கப்படவுள்ளதை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:–

ராஜீவ் காந்தி சாலையானது, மத்திய கைலாஷ் பகுதியில் சர்தார் பட்டேல் சாலையிலிருந்து துவங்குகிறது. இந்த இரண்டு சாலைகளும் சந்திக்கும் இடம் "T" வடிவிலானதாகும். இச்சாலை சந்திப்பில், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, மிகுந்த சிரமத்துடனும் கால விரயத்துடன் கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

எனவே, இந்தச் சாலைச்சந்திப்பில் வாகனங்கள் சிரமமின்றி கடந்து செல்வதற்கு வாகனச் செறிவுகளின் அடிப்படையில், சர்தார் பட்டேல் சாலையிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்குச் செல்லும் வாகனங்கள் இம்மேம்பாலத்தினை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், அடையாறு பகுதியிலிருந்து, கிண்டி நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும், கிண்டி பகுதியில் இருந்து அடையாறு செல்லும் வாகனங்களும் மற்றும் ஓ.எம்.ஆர். சாலையிலிருந்து கிண்டிக்கும் செல்லும் வாகனங்களும் தங்குத்தடையின்றிச் செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

இச்சாலைச் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து சமிக்ஞையும் விலக்கிக் கொள்ளப்படும். மேலும், இருவழிச் சாலை மேம்பாலத்தினை செயல்படுத்துவதற்கு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ரூ.61 கோடி மதிப்பீட்டில் பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் இருவழித்தடம் அகலம் கொண்டதாகவும், ஒருவழி வாகனப் போக்குவரத்து கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 652 மீட்டர் ஆகும் (அணுகு சாலை உட்பட).

சர்தார் பட்டேல் சாலையிலிருந்து, ராஜீவ் காந்தி சாலைக்குப் பிரிந்து செல்லும் இடத்தில் பாலம் வளைவாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளைவானது 30 கி.மீ. வேகத்தில் வாகனங்கள் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வளைவுப் பகுதியில் பாலத்தின் அகலம் கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பாதுகாப்புக்காக பாலத்தின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவரின் உயரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வளைவுப் பகுதியில் எவ்வித பயமின்றி பயணிக்கலாம். இருப்பினும், பாலத்தின் மீதான பயணத்திற்கு வேக கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வேக கட்டுப்பாட்டிற்கான எச்சரிக்கை பலகைகள் பாலத்தின் தடுப்புச்சுவரில் பொருத்தப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் பாதுகாப்பான பயணத்திற்கு மின்விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த "எல்" வடிவ இருவழிச்சாலை மேம்பாலத்தின் பணிகள் முடிவுற்றுள்ள நிலையில், முதலமைச்சரால் வரும் 16–ந் தேதி அன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (மெட்ரோ) எஸ்.ஜவஹர், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

# சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தேர்வர்கள் வீட்டில் இருந்தே படிக்கும் வகையில் மனிதநேய மையம் 'வீடியோ' பாடங்கள்

**சென்னை. பிப்.8–**

**சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தேர்வர்கள் வீட்டில் இருந்தே படிக்கும் வகையில் 'வீடியோ' பாடங்களை மனிதநேய மையம் வெளியிட்டுள்ளது.**

மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் இந்த ஆண்டு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட 933 காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த 4ந்தேதி அன்று வெளியிட்டது. இந்த நிலையில் முன்னாள் மேயர் சைதை துரைசாமி தலைமையிலான மனிதநேய அறக்கட்டளை மையம் சார்பில் இந்த தேர்வுக்கு வீட்டில் இருந்து 'வீடியோ' மூலம் தேர்வர்கள் படிக்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மனிதநேய மையத்தின் தலைவர் சைதை துரைசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

மனிதநேய அறக்கட்டளை" கடந்த 2005–ம் ஆண்டு தொடங்கப்பட்டு சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது.

மனித நேய இலவச ஐஏஎஸ் பயிற்சி மையம் கடந்த 20 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் I, II, IIஏ போன்ற பதவிகளுக்கு ஆயிரக்கணக்கானோர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய பணியாளர் தேர்வாணையம் 2026ம் இந்த ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் உள்ளிட்ட மொத்தம் 933 காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, கடந்த 4–ந் தேதி அன்று அறிவிப்பு வெளியிட்டது. விண்ணப்பிக்க கடைசி நாள் : 24–ந் தேதியாகும்.

இந்தியா முழுவதும் அனைத்து தேர்வர்களும் வீட்டில் இருந்தபடியே ஐ.ஏ.எஸ் தேர்விற்கு பயிற்சி பெறும் வகையில், (UPSC) முதல்நிலைத் தேர்விற்கான பயிற்சியை, இந்தியாவிலேயே முதல்முறையாக தொலைக்காட்சி வாயிலாக இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பொழுது இணையதளத்தில் பதிவு செய்த மாணவர்கள் படித்து பயன்பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கான தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் போட்டித்தேர்வர்கள் இணையதளம் மூலம் சேர்ந்து, இலவசமாக இணையதளத்தில் உள்ள வீடியோ பாடங்களை பயின்று வருகின்றனர்.

இணையத்தின் வாயிலாக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும், சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு தேர்வர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட புதியதாக 500க்கும் மேற்பட்ட காணொளி காட்சி பதிவுகள் இணையத்தளத்தில் இலவசமாக தேர்வர்களுக்கு உதவிட பதிவேற்றப்பட்டுள்ளன.

காணொளி பதிவுகள் தேர்வர்களுக்கு வீட்டிலிருந்தபடியே பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுவது போன்ற ஒரு உணர்வைக் கொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. பயிற்சியின் போது மனதில் எழும் கேள்விகளுக்கு அக்காணொளியிலேயே விடைகள் கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

காணொளி பதிவுகளில் மேம்படுத்தப்பட்ட புதிய தகவல்கள் மற்றும் விரிவான விளக்க உரைகள் தேர்வர்களுக்கு புரியும் வகையில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணொளிகளை காணும்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள www.mntfreeias.com இணையத்தின் வாயிலாகவும் 044 2435 8373, 2433 0095, 98404 39393, 84284 31107 ஆகிய தொலைபேசி எண்கள் மூலமாகவும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு சைதை துரைசாமி தெரிவித்துள்ளார்.

---

# திருச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்திய 5 மாத குழந்தை பலி

**மணப்பாறை, பிப்.8–**

**திருச்சி அருகே தடுப்பூசி செலுத்திய 5 மாத குழந்தை இறந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

திருச்சி மாவட்டம் புத்தாநத்தம் அருகே உள்ள கொன்னம்பட்டியை சேர்ந்தவர் சிவக்குமார். இவரது 5 மாத ஆண் குழந்தைக்கு குளத்துப்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி போட்டுள்ளார். பின்னர் வீட்டுக்கு வந்த சிறிது நேரத்தில் அந்த குழந்தைக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிவக்குமார் குழந்தையை உடனடியாக மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்து மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதையடுத்து குழந்தையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக புத்தாநத்தம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, குழந்தை தடுப்பூசி செலுத்தியதால் தான் இறந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கரூர் குழந்தை பலி

இதேபோல் கடந்த 2ந்தேதி கரூர் சின்னியம்பாளையம் ஆலமரத்துப்பட்டியை சேர்தத கட்டிட தொழிலாளியான சுரேஷ் (வயது 32) எனபவரது மனைவிகு பிறந்து 50 நாட்களான குழந்தை மதுஷாவுக்கு அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்தி உள்ளனர். பின்னர் சுரேஷ் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் திருச்சி ஸ்ரீரங்கம் தசாவதார சன்னதியில் உள்ள தனது மாமியார் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தபோது, நள்ளிரவில் குழந்தை மதுஷாவிற்கு திடீரென முக்கில் இருந்து ரத்தம் வழிந்தது. ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை இறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---


KINGFA

**கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்**

CIN: L25209TN1983PLC010438

**பதிவு அலுவலகம் :** தன் பில்டிங், 3வது மாடி, 827, அண்ணா சாலை, சென்னை 600 002. **இணையதளம் :** www.kingfaindia.com

**மின்னஞ்சல் :** cs@kingfaindia.com **தொலைபேசி :** +91-044-28521736 **பேக்ஸ் :** +91-044-28520420

**டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்**

இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி தயாரிக்கப்பட்ட நிறுவனத்தின் டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பிப்ரவரி 07, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு அங்கீகரித்துள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.kingfaindia.com–ல் கிடைக்கிறது, மேலும் கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை அணுகலாம்.

முடிவுகளை விரிவாகக் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இடம் : புனே
தேதி : 07/02/2026

கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்
ஒப்பம்/–
திரு. தீபக் வியாஸ்
நிறுவன செயலாளர்